1998 நவம்பர் 24]

திரு. ஜி.கே. மணி: இதற்கு முன்பிருந்த அரசுகளும் அரசு விழாவில் இந்த மாதிரி செய்திருக்கிறார்கள். ஆகவே, இது மதச் சார்பில்லாத அரசு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் சொல்வது, உங்களுக்கும் பொருந்தும். இதிலே யார் கலந்து கொண்டாலும் தவறு என்பது சுப்பராயன் அவர்களின் வாதம். எல்லோரும் கலந்துகொள்ளலாம் என்பது எதிர்க் கட்சித் தலைவருடைய விளக்கம். அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு அவர் கோரிக்கை வைத்திருக்கிறார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஏதாவது சொல்ல விரும்பினால் அதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நான் யாரையும் அனுமதிக்க மாட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) முதலமைச்சரைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க மாட்டேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அதை அவரே ஒப்புக் கொண்டார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(திரு. ஜி.கே. மணி நின்றுகொண்டே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)

முற்பகல் 11-35

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கு, அவரே ஒரு தன்னிலை விளக்கம் அளித்து, நேற்று தவறான தகவலின்பேரில் அல்லது உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாத நிலையில், அப்படி ஒரு கருத்தை வெளியிட்டுவிட்டேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வெளியிட்ட கருத்துக்குள் நான் சென்று விவாதிக்க விரும்பவில்லை. இறுதியாக ஒரு கோரிக்கை வைத்து, 'என்னைப் போலவே முதலமைச்சரும் இதைப் புரிந்துகொண்டு போக்குவரத்துத் துறை அமைச்சரை அந்த விழாவிலே கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். நேற்று நான் பேசும்போது, காஞ்சி சங்கராச்சாரியார் மீது தனிப்பட்ட முறையிலே எந்தவிதமான வெறுப்போ, பகையோ எங்களுக்குக் கிடையாது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறேன்.

அதையே நண்பர் சுப்பராயன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் நேற்று விளக்கம் அளித்துவிட்டு, இறுதியாகச் சொன்னபோது, காஞ்சி சங்கராச்சாரியார் மாத்திரம் அல்ல இஸ்லாமிய, கிறித்துவ சமுதாயத்தைச் சார்ந்த பெரியவர்களும் அங்கே அழைக்கப்பட வேண்டும்; இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த விழாவிலே கலந்து கொள்ள மாட்டார் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏன், நம்முடைய சுப்பராயன் அவர்களும், மூன்று பேருமேகூட கலந்துகொள்ளக் கூடாது என்பதுபோல வாதத்தை வைத்தார். இன்று காலையிலே, நான் அப்படிச் சொன்னதுகூட ஒரு நெருடல் என்று திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சங்கராச்சாரியார் மாத்திரமல்ல; கிறித்துவப் பெரியவர்களும், இஸ்லாமியப் பெரியவர்களும்கூட கலந்துகொள்ளக் கூடாது என்ற நோக்கில் அவர், மூன்று பேருமே விழாவிலே கலந்து கொள்ளலாம் என்று நான் சொன்னதை ஒரு நெருடல் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு நெருடலாக இருப்பது எனக்கு நெருடலாக இருக்கலாம்; அல்லது இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தினுடைய சூழ்நிலை என்னவென்றால், மத நல்லிணக்கம் தேவை என்று எல்லாக் கட்சியினரும் ஒருமித்த குரல் கொடுத்து வருகிறார்கள். மதக் கலவரங்கள் ஆங்காங்கே, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்டு, பெரிய அளவிலேகூட கோவை மாநகரத்திலே வெடித்து, அதனுடைய காயங்கள், புண்கள் ஓரளவு ஆறினாலும்கூட வடுக்கள் இன்னும் மறையாத சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழகம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவேதான், அந்த வடு மறையாத நேரத்தில், ஒரு விழாவிலே, ஒரு மதத்தினுடைய தலைவரை மாத்திரம் அழைத்து கலந்துகொள்ளச் செய்வது சரியாக இருக்காது என்ற அந்தக் கருத்தில்தான், மற்ற மதத் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். என்னுடைய கருத்தை இரயில்வே நிர்வாகம் ஆலோசித்து வருவதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. அந்தக் கருத்து ஏற்கப்பட்டு, நாளையதினம் கிறித்துவ சமுதாயத்தின் சார்பிலும், இஸ்லாமிய மார்கத்தின் சார்பிலும் பெரியவர்கள் கலந்து கொள்வார்களேயானால், எங்களுடைய அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும் அதிலே கலந்து கொள்வார்; இல்லையானால், நேற்று எடுத்த நிலையிலேயிருந்து மாற்றம் இல்லை என்பதை நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)